Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්

அனைத்து வகையான
அச்சுவேலைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்:

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

திருமலை வீதி
மட்டக்களப்பு.

தொலைபேசி
065-24821

ஒளி - 01 - கதிர் - 190 20-10-2000 வெள்ளிக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா

# யாழ் பத்திரிகையாளர் நிமல்ராஜ் படுகொலை!

## ஆயுததாரிகள் கைவரிசை !

(யாழ் நிருபர்)

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கச்செயலாளர் மயில் வாகனம் நிமல்ராஜ் நேற்று இரவு 10.15 மணியளவில் இனந்தெரியாத நபர்களின் கைக்குண்டு தாக்குதலுக்கு இலக்காகி பலியாகியுள்ளார். மற்றும் உறவினர்கள் மூவர் இத்தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

யாழ் சுண்டிக்குழியிலுள்ள அவரது இல்லத்தில் இலண்டன் தமிழோசையில் அவர் வழங்கியிருந்த செய்தி ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த சமயம் இவரது வீட்டுக்கு வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் கைக்குண்டை வீசியுள்ளனர். அத்துடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்துள்ளனர். இச்சம்பவத்தில் நிமல்ராஜ் ஸ்தலத்திலேயே பலியானதுடன் அவரது தந்தையான மயில் வாகனம், தாயாரான திருமதி மயில்வாகனம், மருமகள் ஆகிய மூவ்ரும் காயமடைந்துள்ளனர்.

38வயதான நிமல்ராஜ் இரண்டு பிள்ளைகளின் தந்தை. யாழ் முரசொலி பத்திரிகையில் தனது பத்திரிகை வாழ்வை இணைத்துக் கொண்ட இவர் வட இலங்கையின் தலைசிறந்த பத்திரிகையாளர்களில் ஒருவராக திகழ்ந்தார்

லண்டன் தமிழோசை(BBC), சந்தேசிய, ஐ.பி.சி., தமிழ்நெட்.

(8ம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கில் ரெலோ இயக்க அலுவலகங்கள் படையினரால் சுற்றிவளைப்பு

## ஆயுதங்கள் பறிமுதல்!

(மட்டக்களப்பு, வவுனியா நிருபர்கள்)

**வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் அலுவலகங்களுக்கும் ரெலோ உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த ஆயுதங்கள் நேற்று முன் அறிவிப்பு இன்றி படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.**

கடந்த 90 ஆம் ஆண்டு முதல் ரெலொ இயக்கத்திற்கு சட்ட ரீதியாக ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன. நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரையம்பதி, மட்டக்களப்பு, செங்கலடி ஆகிய இடங்களில் அமைந்துள்ள ரெலோ அலுவலகங்களுக்கு சென்ற இராணுவத்தினர் இந்த ஆயுதங்களை பறிமுதல் செய்தனர்.

அதேபோன்று வவுனியாவில் ரெலோ இயக்கத்தினரின் முகாம்கள் அமைந்துள்ள இடங்களான வவுனியா வைரவர் புளியங்குள சிறுவர் பூங்கா அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் உள்ள முகாம், குருமன் கரட்டு முகாம், உக்குளாங்குளம் ஆகிய முகாம்களை படையினர் சுற்றிவளைத்தனர். பின்னர் ஆயுதங்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டது.

மற்றும் மன்னார், யாழ். நகரங்களில் உள்ள ரெலோ இயக்க முகாம்களிலிருந்தும் ஆயுதங்கள் படையினரால் பறிக்கப்பட்டுள்ளன.

மேல் இடத்தில் இருந்து வந்த உத்தரவின் பிரகாரமே ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அவசரகாலச்சட்ட நீடிப்பு தொடர்பான வாக்கெடுப்பில் ரெலோ நீடிப்புக்கு எதிராகவே வாக்களித்தனர். அதேவேளை யுத்தம் நிறுத்தப்பட்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டும் என அழுத்தமாக கோரி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# எமது நிலைப்பாட்டில் இருந்து தளரமாட்டோம்.

## ஆயுதக்களைவு பற்றி ரெலோ முதல்வர் கருத்து

அரசாங்கம் எந்தவொரு நெருக்குதல்களை கொடுத்தாலும் நாம் இப்போது எடுத்திருக்கும் நிலைப்பாட்டிலிருந்து தளரமாட்டோம் என ரெலோ முதல்வரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அடைக்கலநாதன் செல்வம் தெரிவித்தார்.

ரெலோ அலுவலகங்களினதும் முக்கிய உறுப்பினர்களதும் பாதுகாப் பிற்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் இன்று வியாழக்கிழமை இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக கொழும்பில் இருக்கும் அக்கட்சியின் முதல்வரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இதனை தெரிவித்தார்.

இது நடக்கும் என்று எதிர்பார்த்திருந்தோம். எமது கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு அலுவலகங்களில் இருந்து ஆயுதங்கள் அனைத்தும் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டதுடன் அந்த அலுவலகங்களும் சோதனை இடப்பட்டது. பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை எதிர்த்து, அரசின் அவசர கால சட்ட மூலத்தை வாக்களித்த

(8ம் பக்கம் பார்க்க)

## துணிச்சல் மிக்க செயல் வீரனை யாழ் மண் இழந்து நிற்கின்றது.

விவேகமும், துடிப்பும், அஞ்சாமையும் கொண்ட செய்தியாளன் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். துணிச்சல்மிக்க செயல்வீரனை யாழ் மண் இந்து நிற்கின்றது. யாழ் செய்தியாளர் சங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் தன் உற்ற நண்பனை இழந் திருக்கின்றது.

சர்வதேச ஊடகங்களிலுதும் உள்ளூர் ஊடகங்களிலும் யாழ் செய்தியாளராக கடமையாற்றிய நிமலராஜன் துணிச்சல் மிக்க செய்தியாளன், மனித உரிமை மீறல்களை சர்வதேச ரீதியில்

(8ம் பக்கம் பார்க்க)

# அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை நடாத்த ஈ.பி.டி.பி.முயற்சி செய்யும்.

**-டக்ளஸ் தேவானந்தா**

தேசிய ரீதியாகவோ அல்லது சர்வதேச ரீதியாகவோ அரசையும் புலிகளையும் பேச்சுவார்த்தைக்கு கொண்டு வரும் முயற்சியில் ஈ.பி.டி.பி. தீவிர முயற்சியில் இறங்கும் என வடமாகாண புனர்வாழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று பதவியேற்றதைத் தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்

போரை முடிவுக்கு கொண்டு: வருதற்கு ஈ.பி.டி.பி.மூன்று அடிப்

(8ம் பக்கம் பார்க்க)

**பதினோராவது பாராளுமன்றத்தின் புதிய அமைச்சரவை பற்றிய விபரம் 5ம் பக்கம் பார்க்க......**

## அமைச்சர்களுக்கு பிரதமர் அறிவுறுத்தல்

(கொழும்பு)

புதிதாக பதவிப் பிரமாணம் பெற்றுள்ள அமைச்சர்கள் தங்களது பாதுகாப்பு குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேலும் பல தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்பு நகரப் பகுதிக்குள் ஊடுருவியிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# நாகர் கோயில் சண்டையில் ஹெலி வீழ்ந்தது!

(வவுனியா நிருபர்)

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் விமானப்படையினருக்கு சொந்தமான எம்.ஐ.24 ரக ஹெலிகப்டர் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலில் நான்கு விமானப் படை வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் படைமுகாம்கள் மீது விடுதலைப்புலிகள் நடத்தி வரும் ஓயாத அலைகள் 4 தாக்குதல் காரணமாக உதவிக்கு விரைந்த எம்.ஐ. 24 ரக ஹெலிகொப்டர் மாலை 5.30 மணியளவில் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று தொடர்ந்தும் அங்கு கடும் சமர் இடம்பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


## தேசிய அரசு என்றால் என்ன?

இலங்கையின் பதினோராவது பாராளுமன்றம் நேற்றுக் கூடி எதிர்க்கட்சியைச் சேர்ந்த அநுரா பண்டாரநாயகாவை சபாநாயகராக ஏக மனதாக தெரிவு செய்து ஒரு சாதனை படைத்திருக்கிறது.

ஆட்சி அதிகாரத்துக்காகப் போட்டியிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியோ ஐக்கிய தேசியக் கட்சியோ ஆட்சி அமைப்பதற்கான அறுதிப்பெரும்பான்மையைப் பெற்று கொள்ள முடியாமல் போய்விட்டது.

இந்த இரண்டு கட்சிகளில் எந்த ஒரு கட்சிக்கும் ஆட்சி புரிவதற்கான அதிகாரத்தை மக்கள் வழங்க மறுத்து விட்டனர்.

இந்த நிலையில்தான் இரண்டு கட்சிகளும் சேர்ந்து போட்டியில்லாமல் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அநுராபண்டாரநாயகாவை சபாநாயகராகத் தேர்ந்தெடுத்திருக்கின்றன.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சிகளும் இந்தத் தெரிவை அங்கீகரித்து ஏற்றுள்ளன.

நாட்டின் இன்றைய நெருக்கடியான கட்டத்தில் சபா நாயகர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருப்பது நல்ல சகுனமென்று பொதுவாகக் கருதப்படுகிறது.

தேசியப் பிரச்சினைகளுக்கும் இப்படி சகல கட்சிகளும் சேர்ந்து ஏகமனதாக நல்ல முடிவு கண்டால் நாட்டில் அமைதியும் சாந்தியும் ஏற்படும்; நாடும் முன்னேறும் என்று எதிர்பார்க்கலாம்.

இதேசமயம் தேசிய அரசாங்கம் அமைக்க இருபெரும் கட்சிகளும் முன்வர வேண்டுமென்ற கோரிக்கையும் சில வட்டாரங்களில் எழுந்துள்ளது.

தேசிய அரசாங்கம் என்பதற்கு இக்கோரிக்கையை முன்வைப்பவர்கள் கொடுக்கும் விளக்கம் வித்தியாசமாக இருக்கிறது.

தாய்நாட்டைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் சிரத் தொட்டுவ ஆனந்த தேரர் ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

``இரு பிரதான கட்சிகளுக்கும் ஆட்சியமைக்க போதிய ஆசனம் கிடைக்காத தற்போதைய நிலையில் சிறுபான்மைக்கட்சிகளிடம் கையேந்தாது தேசிய அரசாங்கமொன்றை அமைக்க முயல வேண்டும். சிறுபான்மைக் கட்சிகள் தமக்கு வரப்பிரசாதங்களை பெற இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முனைகின்றன.'' என்று தேரர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதேசமயம் ஐக்கிய சிங்கள மகாசபையின் செயலாளர் நாத் அமரக்கோன் ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். அவரும் இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்.

``ஐக்கிய தேசியக்கட்சிக்கும் பொதுஜன முன்னணிக்கும் பெரும்பான்மைப் பலம் கிடைக்காததால் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலாபம் பெற சிறுபான்மைக் கட்சிகள் முயல்கின்றன. இதற்கு செவிசாய்க்கக் கூடாது. சிங்கள மக்களின் எண்பத்தைந்து வீத வாக்குகளைப் பெற்ற பொதுஜன முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் குறைந்தளவு வாக்குகள் பெற்ற சிறிய கட்சிகள் நிபந்தனை விதித்து அமைச்சு பதவி பெற முயல்வதைக் கண்டிக்கின்றோம்.

பிரிவினைவாதத்தை ஒழித்தல். பயங்கரவாதத்தை தோற்கடித்தல் போன்றபொதுவான குறிக்கோள்களை நிறைவேற்ற இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைக்க வேண்டுமென்றும் அமரக்கோன் தமது கடிதத்தில் கேட்டிருக்கிறார்.

இதேசமயம் தேசபிரேமிக்கு முன்னணி செயலாளர் பெக்கமுவே நாயக்க தேரர் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் ``பல்வேறு நிபந்தனைகளை விடுத்துள்ள தமிழ் முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து அரசு அமைப்பதால் நாட்டுக்கு பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்று பயங்கரவாதத்தைத் தோற்கடிக்காது வடக்கு கிழக்கிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெற்றோ முகாம்களில் முடக்கியோ அரசாங்கம் யுத்தத்தை முடித்தால் மக்கள் புலிகளுக்குப் பலியாவதைத் தடுக்க முடியாமல் போய் விடுமென்றும் வடக்கில் தனி,ஈழம் உருவாகுவதோடு நாடு துண்டாடப்பட்டு விடுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

பௌத்த பிக்குகளினதும் பேரினவாதிகளினதும் ``தேசிய அரசாங்கம்'' என்ற சிந்தனை இதுதான். பௌத்த பிக்குகள் மகா சங்கத்தின் ஆசியும் அனுசரணையும் பெற்றுத்தான் ஆட்சிபீடத்துக்கு வருபவர்கள் ஆட்சி நடத்தி வருவார்கள்.

மகா சங்கத்தின் ஆசியும் அனுசரணையும் இல்லாமல் எதுவும் ஆட்சியாளர்களால் செய்ய முடியாது.

தேசியம் என்றால் அவர்களின் அர்த்தப்படி அது சிங்களத்தேசியம் தான்.

தமிழர், முஸ்லிம்கள் என்ற சிறுபான்மையினத்துக்கு இந்தத் தேசியத்தில் இடமிருப்பதாக அவர்கள் நினைப்பதில்லை.

நாட்டுக்காகத் தமிழ், முஸ்லிம் மக்கள் செய்த தியாகம், கடும் உழைப்பு, நடத்திய போராட்டங்கள் எல்லாம் மறந்து போன அழிக்கப்பட்ட விஷயங்கள்.

இந்த நிலையில் தேசிய அரசு உருவாக்கப்பட்டாலும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இனங்களுக்கு என்ன வந்து விடப்போகிறது.

ஆனால் இச்சமயத்திலாவது தமிழ், முஸ்லிம் சமூகங்களும் தலைவர்களும் சற்று அமைதியாக சிந்தித்து சிறுபான்மை இனத்தின் எதிர்காலம் குறித்து ஒரு நல்ல வழிகாணமுன் வர வேண்டும்.

சிறுபான்மைத் தேசியம் அழிந்து போக முடியாது! சிந்திக்கத்தெரிந்த சிங்களப் பெருபான்மைச் சமூகத்துக்கு எடுத்துணர்த்தி பிரிவினைக்கு மாற்றாக ஒரு நல்ல சுயாதிபத்தியமுள்ள (Confederation) தனிமாநிலம், தனிக்கொடி, தனிப்படை அமைந்த சமஷ்டி அமைப்பை ஏற்படுத்த, அரசுகளுக்கு ஆதரவு கொடுத்து ஆட்சியைக் காப்பாற்ற முன்வந்துள்ள, அரசியல் கட்சிகளும் அமைப்புக்களும் முன்வர வேண்டும்.

இப்பொழுதே இதற்கு முயற்சி செய்யாவிட்டால் அவர்கள் சொல்லும் தேசிய அரசு அமையும். இவர்களுக்கும் இடமில்லாமலேபோகும்.

## மின்சக்திக்கான கட்டண உயர்வை கட்டுப்படுத்த

# சில வழிகளும், ஆலோசனைகளும்

**மின்சக்தி வீண் விரயத்தை தவிர்ப்பதிலும் மின்சக்தியை சிக்கனப்படுத்துவதிலும் மின்பாவனையாளர்களினதும் இலங்கை மின்சாரசபையினதும் பங்களிப்பை அதிகரித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்களினது செயற்திட்ட குழுவினரால் இக்கட்டுரை எழுதப்பட்டது.**

நாம் வாழும் சுற்றுப்புறம், சூழல் ஆகும். இச்சூழல் ஒளிமயமாக பேணப்படுவதற்கும். பொருளாதாரம் அபிவிருத்தியடைவதற்கும், மின்சக்தி பெரும் பங்களிப்பு செய்கின்றது. இலங்கையில் நீரின் அழுத்த சக்தியை சக்தி முதலாக கொண்டு மின் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

இலங்கை நீர் சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் நாடாக இருந்தும் மின் சக்திக்கான கட்டணம் மிக உயர்வாக இருக்கின்றது. ஏனெனில் நீர் மின்சக்தி வளங்களை விட குறிப்பிடத்தக்க அளவு மின் சக்தி பெரும் செலவில் இறக்கமதி செய்யப்படும் மசகு ண்ணெயைப் பயன்படுத்தும் அனல் மின் நிலையம் மூலம் உற்பத்தி செய்யப்படுவதனால் ஆகும்.

அனல் மின் சக்தி நிலையம் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்னின் அளவைக் கட்டுப்படுத்தினால் மின்சக்திக்கான கட்டணததையும் கட்டுப்படுத்தலாம். இதற்கு பொது மக்களாகிய நாம் மின்சக்தியை சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலமும், மின்சக்தியை வீண் விரயம் செய்யாது இருப்பதன் மூலமும், தரமான மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதன் மூலம். சட்ட விரோத மின்பாவனையை தடுப்பதன் மூலமும். மின்சக்திக்கான கட்டண அதிகரிப்பில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தலாம் என்பதில் சந்தேகமில்லை.

சட்ட விரோதமாக மின் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இருந்தும் நாம் இவற்றை அறிந்தும் அறியாதவர் போல் இருக்கின்றோம். ஏனெனில் நாம் பெரியளவில் ஏதாவது பாதிப்பை இதுவரை அடையவில்லை என நாம் எண்ணுகின்றோம். ஆனால் நாம் ஒவ்வொருவரும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல பாதிப்புக்களை நாம் அறியாமலேயே அனுபவிக்கின்றோம் என்பதே உண்மை.

அதாவது ஒரு குறித்த எண்ணிக்கையான சட்டபூர்வமான மின் பாவணையாளர்கள் நுகரும் மின் அளவைவிட அதே அளவு சட்ட பூர்வமற்ற மின் பாவணையாளர்கள் நுகரும் மின்னளவு அதிகமாகும். காரணம் இவர்கள் பாவிக்கும் மின் சக்திக்கு கட்டணம் எதுவும் செலுத்துவதில்லை. எனவே இவ்வாறாக சட்ட விரோதமாக பயன்படுத்தும் மின்சக்திக்கு செலவு செய்யும் பணத்தை அரசாங்கம் தமது வாடிக்கையாளர்கள் மீதே சுமத்துகிறது. இச்சுமையை எமக்கும் தெரியாமலேயே நாம் சுமக்கின்றோம். என்பதும் மறக்க முடியாத ஓர் உண்மையாகும்.

இது மாத்திரமல்ல எமக்கு மின் வழங்கும் மின்மாற்றியிலிருந்து ஒரு குறிப்பிட்ட வீச்சு மின்னை மாத்திரமே பெற முடியும். சட்ட பூர்வமற்ற மின் இணைப்பினால் அக்குறிப்பிட்ட வீச்சுக்கு மேலதிகமாக மின்னை பெற வேண்டி ஏற்படுகின்றது. இதனால் பெறுமதிமிக்க மின்மாற்றி விரைவில் செயல் இழந்து போவதற்கும் சந்தர்ப்பம் உண்டு. இதற்கான செலவு யார் மீது சுமத்தப்படும்?

மேலும் இலங்கை சபையினால் மின் பாவனையாளர்களுக்கு வழங்கும் மின் சக்தியில் அழுத்தம் 230 வோல்ற்றாக இருக்க வேண்டும். ஆனால் சட்ட பூர்வ மின் இணைப்பினால் தற்போது வீட்டுக்கு வழங்க்படும் மின் சக்தியின் அழுத்தம் 230 வோல்ற்றுக்கும் குறைவாகவே உள்ளது. இதனால் நாம் மின் விளக்குகளின் முழுப்பிரகாசத்தையும் பெற முடியாமல் இருக்கின்றது. அத்துடன் சில மின் உபகரணங்கள் குறிப்பிட்ட நேரத்தில் செயல்படாமல் இருப்பதுடன், அவை செயல் இழந்து போவதையும் காண்கின்றோம்.

சட்ட பூர்வமற்ற மின் இணைப்பு எமக்கு மின் சக்தி கட்டண உயர்வுக்கும், மின் சக்தியில் உச்ச பயன்பாட்டை அனுபவிக்க முடியாது இருப்பதற்கும் காரணமாக மாத்திரமல்லாமல் உயிராபத்தையும் தரக் கூடியதாக உள்ளது. அதாவது தெரு ஓரங்களில் இருக்கும் மின் கம்பிகளில் தொடுக்கும் உயிர்க்கம்பி மூலம் [illegible] களவாக கொண்டு வரப்படும் மின் இணைப்பு மீண்டும் பாதுகாப்பாக தெருக்கம்பத்தின் நடுநிலை கம்பிக்குக் கொண்டு செல்லாமல், நேரடியாக பூமிக்கு அல்லது கிணற்று நீருக்குள் கொண்டு செல்லப்படுவதால், அயல் வாசிகளுக்கும், கால் நடைகளுக்கும் உயிர் ஆபத்து ஏற்படுகின்றது. சில விவசாயிகள் தமது தோட்டப்பாதுகாப்பிற்காக மின் வேலிகள் அமைத்து இருக்கிறார்கள். இதன் மூலமும் மனிதருக்கும் கால் நடைகளுக்கும் உயிராபத்து ஏற்படுகின்றது.

சட்ட பூர்வமற்ற மின்சக்தி பாவனை எமது நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதற்கான காரணம் யாது? என வினவினால்..

மின் சக்திக்கான கட்டணம் கட்டுக்கடங்காது அதிகரித்துச் செல்கின்றது என பொதுவாக எல்லோரும் கூறுவார்கள். ஆனால் மின் சக்திக் கான கட்டணம் கணிசமான அளவு அதிகரிப்பதற்கு இவ்வாறான சட்ட விரோத மின் பாவனையும் ஒரு முக்கிய காரணி என்பதை நாம் அறிந்த பின்பும், நாமும் சட்டமும் இப்படிப்பட்ட சட்ட விரோத செயல்களை கண்டும், காணாத மாதிரி இருக்கக் கூடாது. நாமும் சட்டத்தை அமுல்படுத்து பவர்களும் இவ்விடயத்தை கண்டும், காணாமல் இருப்பதால் தான் இவர் கள் இப்படிப்பட்ட சட நடவடிக்கைகளில் எவ்வித பயமும் இன்றி தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. உண்மையில் இதுவோர் சமூகப் பிரச்சினை. இதைச் சட்டம் போட்டுத் தடுத்தாலும் திட்டம் போட்டு திருடுகின்றவர்கள் திருடிக் கொண்டுதான் இருப்பார்கள். எனவே திருடனாகப் பார்த்து தன்னில் நல்ல மனப்

(6ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

"மழை விட்டும் தூவானம் விடவில்லை'' என்று சொல்லுவார்கள்

நல்ல மழையில் நனைந்தால் பரவாயில்லை. தூற்றல் என்ற தூவானத்தில் நனைந்தால் வியாதி தான் வருமென்று ஓடித்திரியும் பிள்ளைகளைப் பார்த்து தாய்மார் எச்சரிப்பதையும் காணலாம்.

தேர்தல் முடிந்து வெற்றி பெற்றவர்கள் அடுத்து ஏதாவது பதவி கிடைக்குமா? கொழும்பில் எங்கே தங்கலாம், தேர்தல் வெற்றிக்கு உழைத்தவர்களுக்கு ஏதாவது செய்யலாமா என்ற எண்ணத்துடன் பலரும் கொழும்புக்குப் படையெடுத்துத் தங்கியிருக்க இடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தோற்றவர்களில் சிலர் இன்னமும் தங்கள் தோல்விக்கு என்ன காரணம் என்றும் யார் காரணம் என்றும் ஆராய்ந்து கொண்டிருப்பதாகக் கேள்வி.

சிலர் தேர்தல் தோல்வியை மறந்திருக்க நினைத்து முனைந்தாலும் அவர்களுக்காகத் தேர்தலில் உழைத்தார்களோ இல்லையோ ஆறுதல் சொல்வதாக நினைத்துக் கொண்டு எரிச்சலைக் கிண்டிக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

ஒரு கிராமத்தில் சிலருக்கு தோல்வியடைந்த வேட்பாளர்களிடமிருந்து ``நன்றிக்கடிதம்'' கிடைத்திருப்பதாகவும் ஒரு தகவல் கூறுகிறது.

``உங்களுக்கு விரைவில் நாங்கள் நன்றி சொல்லக்காத்திருக்கிறோம்'' என்று கடிதம் கிடைத்திருக்கிறதாம். இதைப் பெற்றவர்கள் பீதியிருப்பதாகவும் கேள்வி.

பல வருடங்களுக்கு முன்பு ஒரு மாநகர சபைத் தேர்தல் நடந்தது. அப்போது முன்னாள் மேயர் ஒருவரை எதிர்த்து ஒரு கலைக்காரர் போட்டியிட்டார். அவர் நகைச் சுவையாக உரையாடுபவர். அவரது தேர்தல் வெற்றிக்காகவோ தோல்விக்காகவோ ``ஆதரவாளர்கள்'' என்று சிலர் கூடவே சென்று வேலை செய்தார்கள். தேர்தலில் அவர் தோல்வியடைந்து விட்டார்''.

தேர்தல் முடிவுகள் முன்னாள் மேயர் வெற்றிபெற்றதாக அறிவித்தது. மறுநாள் விடிகாலையிலேயே தோல்வியடைந்த வேட்பாளர் மேயர் வீட்டுக்குச் சென்று மேயருக்கு வாழ்த்துக் கூறினார். பின்னர் அவர் வெறியேறிய போது மேயரும் வழியனுப்புவதற்காக கூடவே வந்தார்.

சறுக்கு வந்ததும் அங்கு நின்றவர்களில் சிலரைப் பார்த்து இவர்களெல்லாம் எனக்காகச் சொல்லிக்கொண்டு திரிந்தவர்கள். மேயர் இவர்களைப் பற்றிக் கொஞ்சம் கவனமாக இருங்கள் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

இதன்பின் அங்கு நின்றவர்கள் சிலர் சொல்லிக் கொள்ளாமலேயே நழுவி விட்டனர்.

நடந்து முடிந்த தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்களில் கவிஞர் முத்தழகுவும் ஒருவர். தேர்தல் முடிவுகள் வெளிவந்தபின் முத்தழகுவிடமிருந்து பிறந்த நாலு வரிக் கவிதை இது.

**``மாண்டவர் மீண்டதென்ன**
**பாண்டவர் தோற்றதென்ன**
**ஆண்டவனே நீ எங்கே -இருண்ட**
**ஆதவனே நடந்ததென்ன?''**

**வாசகர்களுக்கு இது சமர்ப்பணம்.**

நடமாடி

# அமெரிக்கா இஸ்ரேல் நாடுகளுக்கு தீவிரவாதி பின்லேடன் கடும் எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

தான் தங்கியுள்ள ஆப்கானிஸ்தான் நாட்டின் மீது தாக்குதல் நடத்தினால் பயங்கர விளைவுகள் ஏற்படும் என்று அமெரிக்கா, இஸ்ரேல், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு சர்வதேச தீவிரவாதியான ஒசாமா பின்லேடன் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்

சர்வதேச பயங்கரவாதியான ஒசாமா பின்லேடன் அமெரிக்காவுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். இவனைப் பிடிக்க சர்வதேச அளவில் அமெரிக்கா பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அவன் தங்கியுள்ள ஆப்கானிஸ்தான் நாட்டை தகர்க்கவும் அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

இதுகுறித்து பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் உருது நாளிதழ் ஒன்றில் ஒசாமா பின்லேடனின் அறிக்கை ஒன்று வெளியாகியுள்ளது.

அந்த அறிக்கையில் தான் வசித்து வரும் ஆப்கானிஸ்தான் நாட்டின் மீது இஸ்லாமிய எதிரிகளாக அமெரிக்கா, இஸ்ரேல், சவூதி அரேபியா ஆகிய நாடுகள் தாக்குதல் நடத்தப் போவதாக தெரிய வருகிறது. அப்படி ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துமேயானால் பயங்கரமான பின்விளைவுகள் ஏற்படும் என்று பின்லேடன் மிரட்டல் விடுத்துள்ளான்.

கடந்த வாரம் ஏமனுக்கு அப்பால் அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான கப்பல் ஒன்று வெடிகுண்டுகள் கட்டிய தற்கொலை படையினரால் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இதில் 17 அமெரிக்கர்கள் பலியானார்கள். இந்தச் சம்பவத்திற்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப் பேற்கவில்லை. என்றாலும் இந்த சம்பவத்திற்கு பின்லேடனும் அவனது கூட்டாளிகளும்தான் காரணமாக இருக்கலாம் என்று அமெரிக்கா சந்தேகிக்கிறது.

எனவேதான் ஒசாமா பின்லேடன் தங்கியுள்ள ஆப்கானிஸ்தான் நாடு மீது தாக்குதல் நடத்த அமெரிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

அமெரிக்கா, இஸ்ரேல், சவூதி அரேபியா ஆகிய 3 நாடுகளும் சேர்ந்து முத்தரப்பு தாக்குதல் நடத்தினாலும் நான் பயப்படமாட்டேன் என்று பின்லேடன் பாகிஸ்தான் செய்தித்தாளில் வெளியாகியுள்ள அறிக்கையில் கூறியுள்ளான்.

என் உடம்பில் உயிர் உள்ளவரை இஸ்லாத்தின் எதிரிகளுக்கு ஒய்வே கொடுக்க மாட்டேன். நான் எனது நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்திக் கொண்டேதான் இருப்பேன் என்றும் பின்லேடன் கூறியுள்ளான்.

## கருங்கடல் வசிப்பிடத்தில் சந்திப்பு

(மாஸ்கோ)

பெல்ரோசிய ஜனாதிபதி அலெக்சான்டிறா ருசிங்கொ ரஸ்ய ஜனாதிபதி விலாடிமிர்புட்டினை அவரது கருங்கடல் பிரதேசத்தில் அமைந்துள்ள வசிப்பிடத்தில் சந்திக்கவுள்ளனர்.

வெளிநாட்டு வியாபாரம், சுதந்திரம், பொருளாதார வலயங்களை ஸதாபித்தல் போன்ற பொருளாதார விடயங்களைப் பற்றி தாம் இருவரும் கலந்துரையாடவுள்ளதாக அலெக்ஸாண்டர் அலக்சனிடம் தெரிவித்துள்ளார்.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

## சட்டவிரோத குடியேற்றக்காரர் சடலங்களாகக் கண்டுபிடிப்பு

(இத்தாலி)

தென்கிழக்கு இத்தாலியின் கொகி நகரின் வீதியோரத்தில் 6 சட்டவிரோத குடியேற்றக் காரரின் சடலங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

டிரக் வண்டி ஒன்றில் பயணம் செய்த இவ் ஆறுபேரும் பின்னர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் வீதியில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இவர்கள் ஆறுபேரும் கொர்கிஸ்தான் வர்கள் என்றும் தெரியவருகிறது. மேலும் கொல்லப்பட்டவர்களின் 5 பேரினது தலைகள் துண்டிக்கப் பட்டிருந்தாகவும் மற்றவரது தலையில் பலத்த காயங்கள் காணப்பட்டதாகவும் கொலைசெய்யப்பட்டு 10 மணித்தியாலங்களின் பின்னரே சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## இஸ்ரேல் – பாலஸ்தீனம் போர் நீடிக்கிறது

(காசா)

மூன்று வாரங்களாக வன்முறைகளை முடிவிற்குக் கொண்டுவர இணக்கம் காணப்பட்ட போதும் மேற்குக் கரையோரம் மற்றும் காசா பகுதியில் இஸ்ரேல் படையினருக்கும் பலஸ்தீனர்களிற்கும் இடையே தற்போது மோதல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிய வருகிறது.

பலஸ்தீனர்கள் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல், மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படையினர் இருவர் காயமடைந்ததாகத் தெரிவித்த இஸ்ரேலிய படையினர் ஆங்காங்கே தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகக் குறிப்பிட்டார். இத்தாக்குதல் சம்பவத்தில் உயிரிழப்புகள் எதுவும் நிகழ்ந்ததாக இதுவரை அறியப்படவில்லை.

## மனைவியைக் கொன்றவனுக்கு புதுடில்லியில் மரண தண்டனை

புதுடில்லியில் உள்ள நீதிமன்றம் ஒன்று 1996ஆம் ஆண்டு நடைபெற்ற கொலை வழக்கு தொடர்பில் ஒருவரிற்கு நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

31 வயதுடைய அசோக் குமார் பாண்டே கர்ப்பிணியான தனது மனைவியையும் 19 வயதுடைய மகளையும் வீட்டில் வைத்து மிகக் கொடூரமான முறையில் கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளார். இந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்படமையால் இத்தீர்ப்பு வழங்கப் பட்டது என நிதிபதி ஆர். கே. குப்தா நேற்று தெரிவித்தார்.

## மியன்மார் அகதிகளுக்குப் பாதுகாப்புக் கண்காணிப்பு

மியான்மார் அகதிகள் மீண்டும் தங்களது சொந்த நாடுகளிற்குத் திரும்பும்போது அவர்களது பாதுகாப்பு தொடர்பாகக் கண்காணிப்பதற்கு தமக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று மெயான்மார் இராணுவ ஆட்சியாளரைக் கேட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகளிற்கான உயர் ஸ்தானிகர் சடாகோ ஒகாட தெரிவித்தார்.

பேங்கொங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசுகையில் இந்த கோரிக்கையை அவர் விடுத்தார்.

# ராஜ்குமாரை மீட்கும் முயற்சி; நெடுமாறன் குழுவுக்கு சோனியா கடும் எதிர்ப்பு

ரெய்ச்சூர், அக். 19-

அகில இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா நேற்று ரெய்ச்சூரில் (கர்நாடகம்) நிருபர்களிடம் கூறியதாவது:-

பிரிவினைவாதிகள் மற்றும் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்பு உள்ளவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்களை ராஜ்குமாரை மீட்க வீரப்பனிடம் தூதர்களாக அனுப்பியது கண்டிக்கத் தக்கது. இந்த தூதர்களுக்கு தடை செய்யப்பட்ட இயக்கங்களுடன் தொடர்பு உண்டு என்ற உண்மையை கர்நாடக முதன் மந்திரி எஸ்.எம். கிருஷ்ணாவும் உறுதி செய்துள்ளார். ஆனால் கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு இதில் தொடர்பு இல்லை.

(ராஜ்குமாரை மீட்பதற்காக நக்கீரன் கோபாலுடன் பழ. நெடுமாறன், விழுப்புரம் பேராசிரியர் கல்யாணி, புதுவை சுகுமாரன் ஆகியோர் தூதர்களாக அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது)

### தமிழ்நாடு வேண்டுகோள்

கேள்வி:- பேச்சுவார்த்தை குழுவில் 3 பேர் சேர்க்கப்பட்டதால் காங்கிரசின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டு விட்டதா?

பதில்:- நான் இதே கேள்வியை கர்நாடக முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணாவிடம் கேட்டேன். அதற்கு அவர் தமிழ்நாடு வேண்டுகோள் படிதான் புதிய நபர்கள் அனுப்பப் பட்டார்கள். கர்நாடக அரசு எந்த வேண்டு கோளும் விடவில்லை என்று என்னிடம் விளக்கினார்.

### ராவை கைவிடவில்லை

ஜார்கண்ட் எம்பிக்களுக்கு லஞ்சம் கொடுத்த வழக்கில் முன்னாள் பிரதமர் நரசிம்ம ராவுக்கு கோர்ட்டில் தண்டனை வழங்கப்பட்டு இருப்பது பற்றி கேட்டதற்கு சோனியா கூறிய தாவது:-

இந்த இக்கட்டான நேரத்தில் நரசிம்மராவை காங்கிரஸ் கைவிட்டு விட்டதாக கூறுவது தவறு. தனிப்பட்ட முறையில் ராவ் மீது காங்கிரசுக்கு அனுதாபம் உண்டு. அவரை விட்டு விலகிச் செல்லும் பேச்சுக்கே இடம் இல்லை. அவர் சட்டப் போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார். பதில் இல்லை

கேள்வி:- நரசிம்மராவ் ஆட்சி காலத்தில் காங்கிரசார் ஆட்சியின் பலனை நன்கு அனுபவித்துவிட்டு. இப்போது வழக்கில் தீர்ப்பு வந்ததும் ஒடி விட்டதாக கூறப்படுகிறதே?

பதில்:- இந்த கேள்விக்கு நான் ஏற்கனவே பதில் அளித்து விட்டேன். மீண்டும் பதில் தர விரும்பவில்லை. இது ஒரு சட்டப்பிரச்சினை. பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை வர இருக்கும் பாராளுமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்ற வேண்டும் என்று காங்கிரஸ் வற்புறுத்தும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஜப்பான் கடலில் ரஷ்ய கப்பல் மூழ்கியது – ஊழியர்கள் தப்பினர்

டோக்யோ:

ஜப்பான் அருகே ரஷ்ய கப்பல் மூழ்கியது. கப்பல் ஊழியர்கள் அனைவரும் உயிர் காப்புப் படகுகள் மூலம் உயிர் தப்பினர். ஜப்பானின் ஹொக்கைடோ தீவு அருகே நிமுரோ கடல்பகுதியில் வியாழக்கிழமை அதிகாலை 1.30-க்கு இவ் விபத்து நேர்ந்ததாகக் கூறப்படுகிறது.


டைஃபன் -1 என்ற அந்த கப்பலில் இருந்தவர்களின் அபயக் குரலைக் கேட்டு ஜப்பான் கடற்படை மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்றனர். அங்கு 3 உயிர் காப்புப் படகுகளில் சிலர் இருந்தனர். அவர்களை மீட்டு விசாரித்தபோது, கப்பலின் இன்ஜின் பகுதியில் தண்ணீர் புகுந்து கப்பல் மூழ்கி விட்டதாகவும் கூறினர்.

கடுமையான காற்றுடன் அலைகள் பெரிதாக இருந்தபோதிலும் அப்பகுதியைச் சுற்றிப் பார்த்த போது கப்பல் ஏதும் தென்படவில்லை. இதையடுத்து கப்பல் மூழ்கியிருக்கலாம் என்று கருதுவதாக ஜப்பான் கடலோரக் காவல் படையினர் தெரிவித்தனர். மீட்கப்பட்ட கப்பல் ஊழியர்கள், ஜப்பான் கடல் பகுதியில் வந்து கொண்டிருந்த மற்றொரு ரஷ்ய மீன்பிடிப் படகிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# பாகிஸ்தான் பஸ் விபத்தில் சாரதி உட்பட ஐவர் பலி

கராச்சியில் ஏற்பட்ட பஸ் விபத்தொன்றில் சாரதியுட்பட ஐவர் உயிரிழந்துள்ளனர். மேலும் 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் இதில் ஆறு பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது எனவும் தெரிவிக்கப் படுகிறது.

பேலா மாவட்டத்தில் இருந்து கராச்சியின் தென் நகரை நோக்கி சென்று கொண்டிருந்த பஸ்வண்டி தென்மேற்கு மாநிலமான பாகிஸ்தானில் விபத்துக்குள்ளாகியது. வேகமாக வந்த பஸ் வண்டியின் சாரதி தனது கட்டுப்பாட்டை இழந்ததால் இவ்விபத்து ஏற்பட்டது என சம்பவத்தை விசாரித்த பொலிஸ் அதிகாரி அப்துல் ரஸ்மான் தெரிவித்தார்.




## முருகன் வரைந்த ஓவியம்

**ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் மத்திய சிறையில் இருக்கும் முருகன் தனது ஒய்வு நேரத்தில் வண்ண ஓவியம் தீட்டி வருகிறார். அதே வழக்கில் பெண்கள் சிறையில் இருக்கும் தனது மனைவி நளினி மற்றும் இலங்கையிலுள்ள பெண் குழந்தை ஸ்ரீஹரி ஆகியோருடன் உள்ளதாக கற்பனையில் வரைந்த மனதை உருக்கும் ஓவியம் இது.**

# பாராளுமன்ற பொதுத் தேர்தல் ~ 2000

## வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இறுதி முடிவுகள்

### திகாமடுல மாவட்டம்





| | |
|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 266,800 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 16,521 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 283,321 |
| பதிவுசெய்யபட்ட வாக்குகள் | 352,537 |

அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் பெற்றுக்கொண்ட

| | வாக்குகள் | விகிதாசாரம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| பொ.ஐ.மு | 136,423 | 51.13% | 4 |
| ஐ.தே.க | 101,628 | 38.09% | 2 |
| சுயேச்சை - 2 | 19,812 | 7.42% | 1 |
| ஜே.வி.பி | 5,696 | 2.13% | 0 |
| சுயேச்சை - 5 | 1,079 | 0.40% | 0 |
| பு.பெ | 527 | 0.19% | 0 |
| சுயேச்சை - 3 | 375 | 0.14% | 0 |
| லி.க | 313 | 0.11% | 0 |
| சுயேச்சை - 1 | 240 | 0.09% | 0 |
| சி.உ. | 238 | 0.08% | 0 |
| பி.எவ்.எவ் | 150 | 0.05% | 0 |
| சுயேச்சை - 6 | 112 | 0.04% | 0 |
| ஸ்ரீ.ல.மு.கா | 63 | 0.02% | 0 |
| சி.ம.பூ.க | 48 | 0.01% | 0 |
| ஐ.என்.டி.எ | 37 | 0.01% | 0 |
| ஸ்ரீ.ல.மு.மு | 33 | 0.01% | 0 |
| று.ம.க | 26 | 0.00% | 0 |

### மட்டக்களப்பு மாவட்டம்





| | |
|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 186,441 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 11,205 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 197,646 |
| பதிவுசெய்யபட்ட வாக்குகள் | 275,485 |

அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் பெற்றுக்கொண்ட

| | வாக்குகள் | விகிதாசாரம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| த.வி.கூ | 54,448 | 29.20% | 2 |
| தே.ஐ.மு | 53,646 | 28.77% | 1 |
| ஐ.தே.க | 29,165 | 15.64% | 1 |
| பொ.ஐ.மு | 16,510 | 8.86% | 1 |
| டி.பி.எல்.எவ் | 9,030 | 4.84% | 0 |
| அ.இ.த.கா | 6,968 | 3.74% | 0 |
| சுயேச்சை - 1 | 5,556 | 2.98% | 0 |
| ரெலோ | 3,909 | 2.10% | 0 |
| ஈ.பி.டி.பி | 3,325 | 1.78% | 0 |
| பு.பெ | 1,938 | 1.04% | 0 |
| சுயேச்சை - 3 | 589 | 0.32% | 0 |
| ஜே.வி.பி | 295 | 0.16% | 0 |
| சுயேச்சை - 2 | 240 | 0.13% | 0 |
| லி.க | 177 | 0.09% | 0 |
| சுயேச்சை - 5 | 143 | 0.08% | 0 |
| சி.உ | 135 | 0.07% | 0 |
| இ.ஐ.மு | 113 | 0.06% | 0 |
| ஸ்ரீ.ம.பூ.க | 92 | 0.05% | 0 |
| ஐ.ஐ.தே.மு | 84 | 0.05% | 0 |
| சுயேச்சை - 4 | 43 | 0.02% | 0 |
| று.ம.க | 35 | 0.02% | 0 |

### திருகோணமலை மாவட்டம்





| | |
|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 133,130 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 8,642 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 141,772 |
| பதிவுசெய்யபட்ட வாக்குகள் | 206,884 |

அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் பெற்றுக்கொண்ட

| | வாக்குகள் | விகிதாசாரம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| பொ.ஐ.மு | 53,860 | 40.46% | 3 |
| ஐ.தே.க | 46,700 | 35.08% | 1 |
| த.வி.கூ | 14,090 | 10.58% | 0 |
| ஈ.பி.டி.பி | 4,524 | 3.40% | 0 |
| அ.இ.த்.தா | 3,748 | 2.82% | 0 |
| ஜே.வி.பி | 3,301 | 2.48% | 0 |
| சுயேச்சை - 2 | 2,621 | 1.97% | 0 |
| சுயேச்சை - 3 | 1,434 | 1.08% | 0 |
| சுயேச்சை - 6 | 872 | 0.66% | 0 |
| ரெலோ | 498 | 0.37% | 0 |
| பு.பெ | 404 | 0.30% | 0 |
| சி.உ | 472 | 0.25% | 0 |
| லி.க | 154 | 0.12% | 0 |
| ஸ்ரீ.ல.மு.கா | 153 | 0.11% | 0 |
| எம்.யு.எல்.எவ் | 137 | 0.10% | 0 |
| ஐ.ஐ.தே.மு | 85 | 0.06% | 0 |
| சி.ம.பூ.க. | 32 | 0.02% | 0 |
| சுயேச்சை - 4 | 31 | 0.02% | 0 |
| சுயேச்சை - 1 | 30 | 0.02% | 0 |
| சுயேச்சை - 5 | 26 | 0.02% | 0 |
| ம.வி.ச.மு | 22 | 0.02% | 0 |
| று.ம.ப. | 19 | 0.01% | 0 |
| பி.எவ்.எவ் | 17 | 0.01% | 0 |

### வன்னி மாவட்டம்




| | |
|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 83,193 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,604 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 89,797 |
| பதிவுசெய்யபட்ட வாக்குகள் | 213,111 |

அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் பெற்றுக்கொண்ட

| | வாக்குகள் | விகிதாசாரம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| ரெலோ | 21,705 | 26.09% | 3 |
| தே.ஐ.மு | 15,837 | 19.04% | 1 |
| ஐ.தே.க | 11,545 | 13.88% | 1 |
| பொ.ஐ.மு | 7,837 | 9.42% | 1 |
| டி.பி.எல்.எவ் | 6,961 | 8.37% | 0 |
| த.வி.கூ | 4,643 | 5.58% | 0 |
| சுயேச்சை - 4 | 3,511 | 4.22% | 0 |
| சுயேச்சை - 2 | 2,414 | 2.90% | 0 |
| சுயேச்சை - 7 | 2,359 | 2.84% | 0 |
| சுயேச்சை - 5 | 1,819 | 2.19% | 0 |
| ஈ.பி.டி.பி | 1,370 | 1.65% | 0 |
| பு.பெ | 1,233 | 1.48% | 0 |
| அ.இ.த.கா | 721 | 0.87% | 0 |
| ஜே.வி.பி | 444 | 0.53% | 0 |
| இ.தொ.கா | 225 | 0.27% | 0 |
| சி.ம.பூ.க. | 144 | 0.17% | 0 |
| சுயேச்சை - 1 | 132 | 0.16% | 0 |
| சி.உ | 104 | 0.13% | 0 |
| ஐ.ஐ.தே.மு | 75 | 0.09% | 0 |
| எல்.பி | 42 | 0.05% | 0 |
| று.ம.க | 34 | 0.04% | 0 |
| சுயேச்சை - 3 | 19 | 0.02% | 0 |
| சுயேச்சை - 6 | 19 | 0.02% | 0 |

# இலங்கையில் இதுவரையில் இல்லாத 43 பேர் கொண்ட அமைச்சரவை

**வடபகுதி அபிவிருத்தி புனர்வாழ்வு, வடக்கு கிழக்கில் தமிழ்மொழி அபிவிருத்தி டக்ளஸிடம் ஒப்படைப்பு.**

## பௌசியிடமிருந்த போக்குவரத்துத்துறை தினேஷிடம் ஒப்படைப்பு.

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை இல்லாத பாரிய அமைச்சரவை நேற்று ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயகா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றது.

பொதுத் தேர்தல் நடந்து முடிவுகள் வெளியாகி எட்டு நாட்களின் பின் இந்த அமைச்சரவை அமைக்கப்பட்டு பதவியேற்றுக் கொண்டது.

பழைய அமைச்சரவையிலிருந்தவர்களே இந்த அமைச்சரவையில் பெரும்பாலும் இடம் பெற்றிருந்தபோதிலும் அமைச்சு இலாக்காக்களில் மாறுதல் செய்யப் பட்டுள்ளன.

அமைச்சர் அஷ்ரப்புடன் சர்ச்சைக்குள்ளாகியிருந்த அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி முன்னர் வகித்த அமைச்சுக்களில் நெடுஞ்சாலைத் துறையைத் தொடர்ந்து தக்க வைத்துள்ளபோதிலும் அவரிடமிருந்த போக்குவரத்துத்துறை தினேஸ்குணவர்த்தனாவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஈ.பி.டி.பி.தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வடபகுதி புனர்வாழ்வு வடக்கு கிழக்கு விவகார அபிவிருத்தி அமைச்சும். ரவூப் ஹக்கீமுக்கு உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் கப்பல் போக்குவரத்து முஸ்லிம் விவகார அமைச்சும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய அமைச்சரவையில் பதினைந்து பேர் புதிய அமைச்சர்களாக இடம்பெற்றுள்ளனர். லக்ஸ்மன் கதிர்காமர் தொடர்ந்தும் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகிப்பார்.

1. பிரதமர் ரத்னசிரி விக்கிரமநாயக்க
 -புத்தசாசன சமய விவகாரம் பெருந்தோட்டத்துறை
2. லக்ஸ்மன் கதிர்காமர்
 -வெளிவிகாரம்
3. பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்
 - அரசியல் யாப்பு விவகாரம், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு
4. பட்டி வீரகோண்
 -நீதி அமைச்சு
5. மங்கள சமரவீர
 -நகர அபிவிருத்தி, நிர்மாணம், பொது வசதி அமைச்சு
6. எஸ்.பீ.திசாநாயக
 -சமுர்த்தி விவகார அமைச்சர்
7. மகிந்த ராஜபக்ச
 -கடற்தொழில், நீரிய வள அமைச்சர்
8. ரிச்சட் பத்திரன
 - பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் நிர்வாக சீர்திருத்தம் ஆகியவற்றிற்கான அமைச்சு
9. அமரசிரி தொடங்கொட
 -தொழிற்பயிற்சி அமைச்சு
10. ஏ.எச்.எம்.பௌசி
 -நெடுஞ்சாலைகள்
11. நிமால் சிறிபால டீ சில்வா
 -தபால், தொலைத்தொடர்பு அமைச்சு
12. மகிந்த விஜேசேகர
 -வனவளம் சுற்றாடல் அமைச்சு
13. டீ.எம்.ஜயரத்தின
 -விவசாய அமைச்சு
14. இந்திக குணவர்தன
 -உயர்கல்வி தகவல் தொழில் நுட்ப அமைச்சு
15. ஆறுமுகம் தொண்டமான்
 - தோட்ட உட்கட்டமைப்பு கால்நடை அமைச்சு
16. டினேஸ் குணவர்த்தன
 -போக்குவரத்து அமைச்சு
17. ரொனி டி மெல்
 -துறைமுகங்கள், தென்மாகாண அபிவிருத்தி அமைச்சு
18. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே
 -விமானப்போக்குவரத்து, விமான நிலைய அமைச்சு.
19. டக்ளஸ் தேவானந்தா
 -வடபகுதி அபிவிருத்தி, புனர்வாழ்வு, வடக்கு கிழக்கு தமிழ் விவகார அபிவிருத்தி அமைச்சு
20. ரவூப் ஹகீம்
 -உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம், கப்பல் போக்குவரத்து அமைச்சு
21. ஜென்றல் அனுருத்த ரத்வத்தே
 -எரிபொருள், மின்சக்தித்துறை
22. அலவி மௌலானா
 -தொழில் அமைச்சு



23. கலாநிதி சரத் அமுனுகம
 -நீர்ப்பாசனம். நீர்வள முகாமைத்து அமைச்சு
24. மைத்திரிபால சிரிசேன
 -மகாவலி அபிவிருத்தி அமைச்சு
25. டபிள்யூ டீ.ஜே.செனவிரத்ன
 -சுகாதாரம்
26. நந்திமித்திர ஏகநாயக
 -உள்ளூராட்சி மகாண சபைகள் அமைச்சு
27. சுனித்ரா பீ.ஜயசேன
 -மகளீர் விவகார அமைச்சு
28. பவித்ரா வன்னியாராச்சி
 -திட்ட அமுலாக்கல் அமைச்சு
29. மொண்டி கொபல்லாவ
 -கலாச்சார அமைச்சு
30. மில்ரோய் பெர்ணாண்டோ
 -சமூக சேவைகள் மீனவ சமூக அபிவிருத்தி அமைச்சு
31. ஜீவன் குமாரதுங்க
 -இளைஞர் விவகார அமைச்சு
32. லக்ஸ்மன் கிரியல்ல
 -சுற்றுலா, விளையாட்டுத் துறை
33. ரெஜினோல் குரே
 -இன விவகார, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு
34. ஷாலிந்த திசாநாயக
 -காணி அபிவிருத்தி, சிறு ஏற்றுமதி
35. அனுர பிரியதர்சன யாபா
 -தொடர்புச் சாதன தகவல்த் துறை
36. திஸ்ஸ கரலிய அத்த
 -சுதேச மருத்துவத்துறை அமைச்சு
37. மகீ பால ஹேரத்
 -கிராமிய கைத்தொழில் அமைச்சு
38. சிசில் பிறேம ஜயந்த
 - கல்வி அமைச்சர்
39. பேராசிரியர் வெஸ்லி குணவர்த்தன.
 -விஞ்ஞான, தொழில் நுட்ப அமைச்சர்
40. விஜேபால மெண்டிஸ்,
 ரெஜி ரணதுங்க,
 -அமைச்சுப் பொறுப்புக்கள் அற்ற அமைச்சர்.

## மின்மாற்றி தகர்ப்பு: மூவர் கைது

நுவரெலியாவில் மின்மாற்றி ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு ஒன்றைக் கண்டுபிடித்த அகற்றியிருப்பதாக சிறீலங்காப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து, மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

## மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கான பயிற்சி நெறி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திச் சங்கம் மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கு விசேட பாடசாலை மூலம் அபிவிருத்தி அடையவைக் கவுள்ளது. அதன் அடிப்படையில் தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்த தமிழ் நாடு மூளை வளர்ச்சி குன்றியோருக்கான புனர்வாழ்வு விசேட கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் ஜோன் முருகசெல்வம் அவர்களினால் மூளை வளர்ச்சி குன்றியோருக்கும் அவர்களது பெற்றோருக்கும் விசேடகருத்தரங்கினை நடாத் தவுள்ளது.

இதில் கலந்து கொள்ள விரும்புவோர்பின்வரும் முகவரியுடன் 30-10-2000க்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு மட்/கல்வி அபிவிருத்திச் சங்க செயலாளர் ச.சந்திரகுமார் தெரிவித்தார். செயலாளர்- கல்வி அபிவிருத்திச் சங்கம், 15/1, கோவில் வீதி.கல்லடி. உப்பேரடை, மட்டக்களப்பு.

## தேர்தல் வன்முறையில் ஈடுபட்ட பொ.ஐ.மு.ஆதரவாளருக்கு பிணைமறுப்பு

(நமது நிருபர்)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் 7 பேர் நுவரெலிய பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிணையில் செல்வதற்கும் மறுக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 10ஆந் திகதி அன்று நடைபெற்ற பொதுத்தேர்தலன்று வாக்களிப்பு நிலையங்களுள் ஒன்றாக அமைந்திருந்த கண்டியில் உள்ள புனித ட்ரினிட்டி கல்லூரிக்கு காலையில் சென்ற பொதுஜன ஐக்கியமுன்னணியின் ஆதரவாளர்கள் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசாரது ஆயுதங்களைப் பறித்துள்ளதுடன் வாக்களிக்கும் பத்திரங்களையும் பறித்துள்ளனர்.

இதையடுத்து பிரதி நீதவான் எஸ்.எம்.ஆர்.ரனராஜவால் நடாத்தப்பட்ட அடையாள அணிவகுப்பின் போது பொலிஸ் கொன்ஸ்டபிள் ராஜரட்ணவால் அடையாளம் காட்டப்பட்டனர்.

இதையடுத்து கைது செய்யப்பட்ட இந்த ஏழு ஆதரவாளர்களையும் பிணையில் விடுதலைசெய்வதற்காக விடுக்கப் பட்டகோரிக்கையை டபிள்யூ.ஏ. ரீ.ரட்னாயக மறுத்துள்ளார்.

## வாழை மரம் விழுந்து ஒருவர் மரணம்

(கொழும்பு)

வாழை மரத்தில் இலை வெட்ட முயன்ற ஒருவர் மரம் முறிந்துவிழுந்ததால் அவ்விடத் திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம் நாகொட வலகும்பறபகுதியில் நடந்துள்ளது.

எச்.எம்.சுபசிங்ஹ என்பவரே இச்சம்பவத்தில் பலியானவராவார்.

## ஓட்டமாவடிப் பிரதேச இந்து இளைஞர் மன்றம்

(அரியம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஓட்டமாவடி பிரதேசத்தில்புனானை ஆலங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அண்மையில் இந்து இளைஞர் மன்றம்அங்குரார்ப்பணம் செய்யப் பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சி.யோகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவானார்கள்.

தலைவராக சிவம் அருளானந்தம், செயலாளராக நாராயணமூர்த்தி புவனஜெகன், பொருளாளராக கந்தவனம் இளங்கோவன், உபதலைவராக பே.ஜிவரெத்தினம், உபசெயலாளராக நா.புலேந்திரன்

இவர்களுடன் 5பேர் கொண்டநிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



மட்டக்களப்பு,கல்லடி உப்போடை, இ.கி.மி. விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் சசிகரன் கோபிநாத் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் சசிகரன்பிறேமா தம்பதியரின் புதல்வராவார்.

## ஆசிரிய மாணவர்கள் கற்பித்தல் பயிற்சி!

(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள் இருவாரக் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் 23ம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 3ம் திகதி வரை இப்பயிற்சி நடைபெறுகிறது. இவ் ஆசிரியர்கள் பட்டிருப்பு. மட்டக்களப்பு. கல்குடா வலயங்களிற்குட்பட்ட பாடசாலைகளிலே கற்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி முதலாம் வருட மாணவர்களின் முதலாவது கற்பித்தல் பயிற்சி என்பது குறிப்பிடத்தக்கது.இவ் ஆசிரியர்கள் தமது பயிற்சிக் காலத்தில் 40 கற்பித்தல் பயிற்சி நாட்களைப் பூர்த்தி செய்ய வேண்டியது இன்றியமையாதது.

## மின்சக்திக்கான ........(2ம் பக்க தொடர்ச்சி)

பாங்கைவளர்த்து திருந்துவதற்கானவழிவகைகளை ஏற்படுத்துவதும், தீர்வுக்கான நல வழியாகவும் அமையலாம்.

வரப்புயர நெல் உயர்ந்து கோன் உயர்வது போல் நாம் ஒவ்வொருவரும்மது தேவைக்காக நுகரும் மின் சக்தியை துஸ்பிரயோகம் செய்யாமலும், சிக்கனமாகவும் பயன்படுத்துவோமாயின், நாம் ஒவ்வோர் வாடிக்கையாளரும் நுகரும் மின் சக்தியின் அளவும் குறையும். அத்துடன் இலங்கை மின்சார சபையிடம் நாம் கோரும் மின்சக்திக்கான கேள்வியும், கணிசமான அளவு குறையும். அப்படி குறையும் இடத்து அனல்மின் உற்பத்தியைக் குறைப்பதன்மூலம் மின்சக்திக்கான கட்டணத்தையும் குறைக்கலாம் என்பது மின்சார சபையினது முக்கியமான வாசகமாகும் (மந்திரமாகும்).

எது எப்படி இருப்பினும் மின் சக்திக்கான கட்டணம் குறைகிறதோ இல்லையோ நாம் ஒவ்வொருவரும் மின்சக்தி சிக்கனத்தையும், மின்சக்தி துஸ்பிரயோகத்தை தவிர்ப்பதையும் கடைப்பிடிப்போமாயின் எமது தனிப்பட்ட மின் சக்திக்கான கட்டடணம் குறையும் என்பது நிச்சயம். இதனை எங்களில் பலர் தமது சொந்த அனுபவத்தின் மூலம் கண்டிருப்பார்கள்.

(தொ ரூர்)

## இரு சிரேஷ்ட உறுப்பினர்களை ஸ்ரீ.மு.காங்கிரஸ் இடைநிறுத்தியது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீடம், நேற்று முன்தினம் அதன் இரு உறுப்பினர்களை இடைநிறுத்தும் செய்வதாகத் தீர்மானித்துள்ளது.

மேற்படி இருவரும், இம்முறை தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம் கொடுத்து ஐ.தே.க.பக்கம் சேர்க்க முயன்றதாகக் குற்றஞ்சாட்டப் பட்டேஇடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ளனர்.

இந்த இடைநிறுத்தம் முற்றிலும் ஓர் ஒழுககாற்று நடவடிக்கையே என முஸ்லிம் காங்கிரஸின் இணைத்தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதே வேளை ரவூப் ஹக்கீம் பேரியல் அஷ்ரப்புடன் கட்சிக்குள்ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பாக இரகசியப் பேச்சுவார்த்தையொன்றை நிகழ்த் தியுள்ளார்.

## குமார் பயன்படுத்திய ''செலுலரை'' ஆய்வுக்கூடப் பரிசோதனை செய்யக் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் சுட்டுக் கொல்லப்பட்ட குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் சி.டி.பி. (கொழும்பு புலனாய்வுப் பிரிவினர்) யினர் குமார் பயன்படுத்திய ''செலுலர்'' தொலைபேசியை ஆய்வுக்கூடப் பரிசோதனைக்கு அனுப்புவதற்கு நீதிபதியின் அனுமதியைக் கோரியுள்ளனர்.

பரிசோதனைகளின் மூலம் குமார் கொல்லப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் தொடர்பு கொண்டு பேசிய விபரங்களை கண்டுகொள்ளலாம் என் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தாக்குதல் நடந்தஇடத்திலிருந்து குறறவாளிகள் தப்பியோடுவதற்குப் பயன்படுத்திய முச்சக்கர வண்டியைக் கண்டுபிடிக்கவும் சி.டி.பி.விசேட பொலிஸ் குழுவை நியமித்துள்ளது.

தாக்குதலில் ஈடுபட்ட மொரட்டுவ சுனில், சுஜீவ் மற்றும் இன்னொருவரும் தமது பாதாள உலக வேலைகளுக்கு முச்சக்கர வண்டியையே பயன்படுத்தி வருவதாகவும்,இதனைக் கண்டு பிடிக்க பொதுமக்கள் உதவ வேண்டுமெனவும் சி.டி.பி.தெரிவித் துள்ளது.

முச்சக்கர வண்டியின் சாரதி பற்றிய தகவல் தமது விசாரணைகளின் முன்னேற்றத்துக்கு மிக அவசியம் என சி.டி.பி யின் சிரேஷ்ட அதிகாரி எஸ்.பி.பந்துல விக்கிரமசிங்ஹ தெரிவித்துள்ளார்.

விசாரணைகளை மேற கொண்டு வரும் டி.ஐ.ஜி.போதிலியனகே,குற்றவாளிகள் பயன்படுத்தியதாகக் கருதப்படும் இரு ஆயுதங்களையும் மருதானைப் பொலிசிலிருந்து எடுத்து வர மௌண்ட வவுனியா நீதவானிடம் அனுமதி கோரியுள்ளார்.

குமார் பொன்னம்பலம் அவர்கள் கடந்த ஜனவரி 5ம் திகதியன்று கொல்லப்பட்ட ராமகிருஷ்ண வீதிப் பகுதியிலுள்ள மக்களையும் பொலிசார் தற்சமயம் விசாரித்து வருகின்றனர்.

## விஞ்ஞான கணிதப் போட்டிகள் எதிர்வரும் ௨௨,௨௯ம் திகதிகளில்

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு வலயத்திற்குட்பட்ட கோட்டங்களுக்கிடையிலான விஞ்ஞான - கணித போட்டி நிகழ்ச்சிகள் எதிர்வரும் 22-10-2000, 29-10-2000 ஆகிய தினங்களில் நடைபெறவிருக்கின்றன. மண்முனைப்பற்று, மண்முனை மேற்கு, ஏறாவூர், காத்தான்குடி, மண்முனை வடக்கு ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைமாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றனர். தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான பங்குபற்றும் இம்மாணவர்களில் தெரிவு செய்யப்படுவோர் வலய மட்டப்போட்டிகளில் பங்கு பற்றுவார்கள் என விஞ்ஞான உதவிக்கல்விப்பணிப்பாளர் செல்வி.அ.கனகசூரியம் தெரிவித்தார்.

## வலயக்கல்விப்பணிப்பாளர் திடீர் விஜயம்

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு வலயக்கல்விப்பணிப்பாளர் ஆர்.மாணிக்கராஜா நேற்றுவியாழக்கிழமை காத்தான்குடிஅந்-நாஸர் வித்தியாலயத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அங்கு சென்ற வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்கள்வித்தியாலய ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ததோடு.புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ஆராதனை மண்டபத்தின்கட்டிட வேலைகளையும் பார்வையிட்டுச் சென்றார்.

## மதமாற்றத்தைத் தடுத்து இந்து மதம்காக்க கிராமம் தோறும் எழுச்சிக் கூட்டம்

(அரியம்)

வாழைச்சேனை ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆலங்குளம் ஸ்ரீமுருகன் ஆலயத்தில் நாளை 21ம் திகதி சனிக்கிழமை இந்து சமய எழுச்சிக்கூட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது.

ஆலயப்பரிபாலன சபைத் தலைவர் எஸ்.குணரெத்தினம் தலைமையில் இடம் பெறும் இவ் எழுச்சிக்கூட்டத்தில் இந்துமத துறவி ஸ்ரீமத்சுவாமி தந்திரதேவா பிரதம அதிதியாக கலந்து சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் செயலாளர் எஸ்.புஸ்பலிங்கம், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவர் யோகேஸ்வரன் ஆகியோரும் இக்கூட்டத்தில் உரையாற்ற வுள்ளனர்.

மதமாற்றத்தை தடுத்து இந்துமதத்தின் தத்துவத்தை எடுத்துக்கூறி தியானத்தை வளர்க்கும் நோக்குடனேயே இவ் எழுச்சிக் கூட்டம் கிராமம் கிராமமாக இடம் பெறும் என மட்டக்களப்பு. அம்பாறை மாவட்ட இந்துஆலயங்களின் ஒன்றியத்தின் செயலாளர் எஸ்.புஸ்பலிங்கம் தினக்கதிருக்கு தெரிவித்தார்.

## பழுகாமம் குண்டு வெடிப்பு

### சந்தேக நபர்கள் கைது

(நமது நிருபர்)

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத பழுகாமத்தில் கடந்த 15ம்திகதி ஞாயிறு இடம் பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக விடுதலைப்புலிகள் பழுகாமத்தைச் சேர்ந்த சிலரை சந்தேகத்தின் பெயரில் கைது செய்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்பின் போது குண்டைப் பொருத்தியவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. விடுதலைப்புலிகளின் முத்த உறுப்பினரான"ரமணன்" என்பவரை இலக்கு வைத்தே இக்குண்டு பொருத்தப் பட்டிருக்கலாம் என நம்பப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதே வேளைஇக் குண்டு வெடிப்பில் உடல் சிதறி உயிர் இழந்தவர் குறுமண்வெளியைச் சேர்ந்தவர் என நம்பப்படுவதாகவும் இவர் பழுகாமத்தில் வந்து தங்கி நின்றவரெனவும் விடுதலைப் புலிகள் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளதாகவும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.




## பாக்கிஸ்தான் பயிற்றுவிப்பாளர் பதவி விலகும் அபாயம்

(பிரகாஸ்)

கென்னியா நைரோபில் நடைபெற்று முடிந்த ஐ.சி.சி. நொக்கவுட் போட்டிகளின் போது பாக்கிஸ்தான் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகும் வாய்ப்பை இழந்தது. நியுசிலாந்து அணியிடம் இதுதொடர்பாக பாக்கிஸ்தான் பயிற்றுவிப்பாளரான யாவிட்டுக்கு பதவியில் இருந்து விலகக்கோரி அக்ரம், மொயின் ஹான், சகித் அன்வர்,இன்சுமாம் முல் ஹக் இதியாஸ் அகமட் சக்கிலீன் முஸ்டக் யுசுப் யொகானா, ஆகிய ஏழுவீரர்களும் பாக்கிஸ்தான் கிரிக்கட் கட்டுப் பாட்டுச் சபைக்குகீழ்கண்டவாறு கருத்தினை சமர்ப்பித்துள்ளனர். இம்முறை தமக்கு ஏற்பட்ட தோல்விக்கு எமது பயிற்றுவிப் பாளரே காரணம் எனவும், தமக்கு போதிய ஆதரவு இன்மையும். சில வீரர்களை அணியில் விளையாட அனுமதிக்காததுமே இவற்றுக்கான காரணங்களாக அமைந்துள்ளன என்று இவ்வீரர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தற்போது, புதிய பயிற்றுவிப்பாளர் யார் என்பதுதான் கேள்வியாக மாறிவிட்டது.

## பெல்ட்டி அடித்த ரொபின் சிங்

(பிரகாஸ்)

கென்னிய நைரோபில் நடைபெற்ற ஐ.சி.சி நொக்கவுட் இறுதிப்போட்டி நியுசிலாந்து இந்தியாஅணிகள் மோதிக் கொண்டன. இப்போட்டியில் தனக்காகவும், அணிக்காகவும் திறம்பட ஆடிக்கொண்டிருந்த சமையம் சேனக் கோணர் வீசிய பந்தையுவராஜசிங் மிகலாவகமாக அடித்து விட்டு ஓடிய சமையம் ரண் அவுட்முறையில் ஆட்டமிழக்க நேர்ந்தது அவ்வேளை ரொபிங் சிங் பெல்ட்டி அடித்து அந்த ரண்அவுட் முறையை தக்கவைத்துக் கொண்டார்.அது மாத்திரம் இன்றி தனக்காக 5வது ஓட்டத்தை பெற முனைந்த சமையம் நியுசிலாந்து அணி வீரர் மீது வீசப்பட்ட பந்து பட்டுசற்றுநேரம் துடிதுடித்துப்போனார். பின்னர் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார். அலோட் வீசிய பந்தில் டீபன் பிளைமினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவருக்கு நடந்த சில உபாதை காரணமாக இந்திய ரசிகர்கள் ஆத்திரப்பட்டு கோஷம் எழுப்பினர். என்பது குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கட் சூதாட்டம் தொடர்பான விசாரணை நவம்பர் 30இல்

கிரிக்கற் சூதாட்டம் தொடர்பாக சகல நாடுகளினதும், கிரிக்கற் வீரர்கள், நடுவர்கள் மற்றும் சபை அதிகாரிகளிடம் எதிர்வரும் நவம்பர் மாதம் 30ம் திகதிக்குமுன்னர் விசாரணைகளை நடாத்த வேண்டும் என்று சர்வதேச கிரிக்கற் கவுன்சில் சபை அறிவித்துள்ளது.

ஒவ்வொருவருடமும் 5 கேள்விகள் கேட்கப்பட வேண்டும் எனகோரியுள்ள சர்வதேச கிரிக்கற் சபைகுற்றச்சாட்டுகள் நிருபணமாகும் பட்சத்தில் அவர்களிற்கு கடுமையானதண்டனை வழங்கப் படும் என்றும் கூறியுள்ளது.

இதேவேளை பாக்கிஸ்தான், இந்தியா, மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளது வீரர்களிடமே விசேடமாக விசாரணைகள் மேற்கொள்ளப் படவுள்ளதுஎனவும் கூறப்படுகின்றது.

## மரதன் ஓட்டப்போட்டியில் சோபியா பங்கு பெறவுள்ளார்.

பேருநாட்டு ஜனாதிபதியின்அல்போட்டோ குஜிபோரியின் மகள் கெய்தோ சோபியா அடுத்த மாதம்நியுயோக்கில் நடைபெறவிருக்கும் 42.கி.மீ மரதன் ஓட்டப் பந்தயத்தில்ப் பங்கு பெறவுள்ளார்.

இவரது பயிற்சியாளர் பேரு நாட்டுக்கான அமெரிக்க தூதுவரான ஜோன் ஹெமில்டன் ஆவார்.அவரும்அந்த ஓட்டப்பந்தயத்தில் பங்குபெற உள்ளார்.

தற்போது சோபியா தனது தகப்பனது அதிகாரபூர்வ உதவியாளராகப் பணியாற்றி வருகிறார்என்பதும் குறிப்பிடத் தக்கது.



கம்போடியாவின் கரப்பந்தாட்டக் குழுவினரில்இருவர் பயிற்சிகளுக்கு ஆயத்தமாவதை படத்தில் காணலாம். 11வீரர்களின் 10 பேர் நில கண்ணி வெடிகளினால் பாதிப்புற்ற கால்களையோ அல்லதுகைகளையோ இழந்தவர்கள். கடைசி நேரத்தில் இங்கிலாந்து போட்டியில் இருந்து விலகியதை அடுத்து கம்போடிய குழு அவ்விடத்தில் அதற்குப் பதிலாக போட்டியில் கலந்து கொள்கிறது.4000க்கும் அதிகமான அங்கவீன வீரர்கள் 125 நாடுகளில் இருந்து 18 விளையாட்டுகளில் பங்கு பற்றுகின்றனர். இவர்கள் பங்குபற்ற இருக்கும் 11வது பரா ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நேற்று அவுஸ்திரேலியாவில் ஆரம்பித்துள்ளது.

## நைஜீரியா பங்குபற்றாது

சிலியில் நடைபெறவுள்ள சர்வதேச கனிஸ்ட மெய்வல்லுனர் போட்டியில் நைஜீரியா அணி கலந்து கொள்ளவில்லை. நைஜீரியா அணியினர் சிலிக்கான நுழைவுக் கடவுச்சீட்டைப் பெறத்தவறியதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

நைஜீரியாவில் உள்ள சில நாட்டுத் தூதுவராலயம் எவ்வித அதிகார பூர்வ நடவடிக்கைகளும் எடுக்காத நிலையில்நைஜீரியா அணியினருக்கு அனுசரணை வழங்கிய அனைத்து விமானக் கம்பனிகளும் உதவி செய்ய மறுத்து விட்டன.

## வானத்தில் வேடிக்கை காட்டிய கங்குலி!

கென்னியா நைரோபில் நடைபெற்றI-C-C நொக்கவுட் போட்டிகளில் சௌரவ் கங்குலி தென்ஆபிரிக்காவுடனான போட்டியில்141ஓட்டங்களை ஆட்டமிழக்காதுபெற்றுக்கொண்டார். அப்போட்டியில் 15பவுன்டறிகளையும் 6சிக்சர்களையும்சிறப் பாகஅடித்து பார்வையாளர்களை வாண வேடிக்கை பார்க்கவைத்தார் கங்குலி.

## ஆன்மீகம் அறிவோம்

இறைவன் அருளிய வார்த்தைகள்.நம் மதக்கோட்பாடுகளிலும் கொள்கைத் திரட்டுக்களிலும் காணக்கிடக்கின்றன.இவ்வார்த்தைகள் ஞானம் நிறை, வல்லமை நிறை. உயிர் தரும், ஊட்டம்தரும் வார்த்தைகள். ஒவ்வொரு மதத்திலும், மார்க்கங்களிலும் ஆன்மீகம் சொல்லப்படுகின்றது.ஆன்மீகம் கற்று, ஆன்மீகம் கண்டுணர்ந்து, ஆன்மீகத்தையே கடந்து பக்தி, முத்திநிலைஅடைந்த குருமணிகளும், குருதேவர்களும் அனேகம் காணப்படுகின்றார்கள். இவர்கள் இறைவனைக்காண, இறைவனை அடைய, இறைவனைச் சந்திக்க, இறைவனுடன் சங்கமமாக, தனிமையை,அமைதியை நாடினார்கள். தியானமும், தபமும் இவர்களுடைய வாழ்வில் ஒன்றாகக்கலந்துள்ளது. இவர்கள்அமைதியின் ஆண்டவரை மௌனத்தில் கண்டார்கள்.

"கடவுளின் வார்த்தையே ஞானத்தின் ஊற்றும், அதனை அடையும் வழிகளே அவருடைய நித்திய கட்டளைகளுமாய் இருக்கின்றன.தமது எல்லாப் படைப்புகளிலும்,எல்லா உயிரினங்களிலும் தமது விருப்பத்திற்கு ஏற்றபடி, அதைப்பகிர்ந்துள்ளார். தம்மை நேசிப்பவர்களுக்கு அதை அருளினார்" சீராக்.1:5-10

ஆகவே கடவுளின் வார்த்தைகளையும், கட்டளைகளையும், மனச்சான்றிதழின் நற்கட்டளைகளையும் சிரமேற்கொண்டு, தூய வாழ்வு வழங்கி வாழ்ந்து ஆன்மீகத்துள் நுழைந்து பரலோக இன்பம் காண்போம்.

**அருட்.சகோ.ஞா.மரியநாதன்**

## வாசகர் நெஞ்சம்

## யுத்தம் வேண்டாம்

எதிர்வரும் 20,21,22ம் தேதிகளில் கல்லாறு வை.எம்.சி.ஏ யுத்தம் வேண்டாம் என்ற தொனிப்பொருளில் கிழக்கு வை.எம்.சி.மக்களை ஒன்றி[illegible] செயல்திட்டமொன்றை நடாத்த உள்ளது. இதில் கல்லாறு, கோமாரி, கல்[illegible]ன, மண்டூர, களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை, திருமலை ஆகிய வை.எம்.சி.ஏக்களின் இளைஞர்கள் பங்குபற்றவுள்ளனர். இதன் படி 21ம் திகதி கல்முனைநகரிலும்,22ம் திகதிபெரியகல்லாற்றிலும், யுத்தம் வேண்டாம் சமாதானமே வேண்டும் என்பதை வலியுறுத்தி பொது மக்களிடையே கையெழுத்து பிரச்சாரமும் கருத்தரங்குகளும் இடம் பெறும் அத்தோடு யுத்தம் வேண்டாம் என்ற ஸ்ரிக்கர்களும் வழங்கப்படும். இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நோர்வே அடல்டா இன்ரநேசனல் ஸ்தாபனத்தை சேர்ந்த இரு பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

***சு.பாவிந்தன்***
***கல்லாறு***

## பிறந்த திகதி தரும்யோகம்.

## ஜோதிடம் யூன் - 01

யூன் 1-10-19-28-ம் தேதிகளில் பிறந்தவர்களின் பலன்கள்:-

எண் 1 அதன் அதிபதி **சூரியன்**

யூன் 1,10இல் பிறந்தவர்கள் சுக்கிரனின் ஆதிக்கத்தையும் பெற்றவர்கள்.

மிகவும்இரக்க மனப்பான்மை உடையவர்கள். புகழ்ச்சிக்கு மயங்குவீர்கள். கற்பனைவளமிக்க கவிஞரா வீகள்.எந்த சூழ்நிலையிலும் பணியாற்றும் செயல் வீரர்கள். எத்தனை துன்பங்கள் வந்தாலும் அவைகளையெல்லாம் தாங்கும் மனோசக்தியும், துடிப்பும் உள்ளவர்கள். ஒரே நேரத்தில் இரண்டு பணிசெய்யும்ஆற்றல் பெற்றவர்கள்.அரசபணியில் அமர்ந்திருந்தால் ஓய்வு பெற்றபின் ஓய்வாக இல்லாமல் தாங்கள்கற்றகலைகளில் ஏதாவதொன்றில் தொழிலும் செய்து வருவீர்கள். சும்மா இருப்பது சுகம் தரும் என்று நினைக்காதவர்கள் உங்களது பணியில் யார் குறுக்கிட்டாலும்அதை விரும்ப மாட்டீர்கள். உங்களது செயல் திறனை மற்றவர்கள் புரிந்து கொள்வது கஷ்டமே.

எப்பொழுதும்ஒரே நேரத்தில் இருக்கும் எண்ணமில்லாதவர்கள். அதற்கேற்ற பணியும் அமையும். அரசு ஊழியராக மாறுதல்பெறும் பணியாளரா கவோ, அல்லதுவிற்பனைப் பிரதிநிதிகளாவோ பணியாற் றுவீர்கள். பல ஊர்களில் வாழ்ந்து அங்குள்ள மக்களுடன் பழகி அவர்களது பழக்கவழக்கங்களை ஆராய்வதில் ஆர்வம் அதிகம் உடையவர்கள். விஞ்ஞான கண்ணோட்டத்திலேயே எதையும் ஆராயும் ஆராய்ச்சி மனப்பான்மை கொண்டவர்கள். விஞ்ஞானியாக, கண்டுபிடிப்பாளராக,ஜோதிடராக, மனோதத்துவநிபுணராகஇதில் ஏதாவதொரு தொழிலும் அமைந்து அதில் புகழும செல்வமும் பெறுவீர்கள். எதிலும் புதுமையை விரும்புவீர்கள். புத்தகப்பிரியர் பல நூல்களைக் கற்கும் திறமைசாலி. மேலும் சிறந்த எழுத்தாளர். குடும்ப வாழ்க்கையில் சிறுசிறு சலசலப்புக்களும் ஏற்படும். ஆனால் அவைகளையெல்லாம் கடந்து செல்லும் ஆற்றல் உள்ளவர்.எப்பொழுதும் சுறுசுறுப்புடன்பணியாற்றுவீர்கள். மனக் கட்டுப்பாடுடையவர்கள். சுயமுன்னேற்றத்தால் செல்வ நிலையில் உயர்வடைவீர்கள்.

உங்களது இளமைக் காலம்பண விஷயத் தில் சற்று தொல்லைகளைத் தரும். வாழ்க்கை என்றால் என்ன என்பதை அக்காலத்தில் உணரும் பல சந்தர்ப்பங்கள் ஏற்படும். அது பிற்காலத்தின் வாழ்க்கைக்கு ஒரு அடித்தளமாக அமையும். அதிர்ஷ்டலாபச் சீட்டில் ஆர்வமுடையவர்கள்.ஆனால் அதில்அதிகலாபம் பெற முடியாது.இருந்தும் எதிர் பாரத நிலையில் எதிர்பார்க்காத இடத்தில் செல்வம் பெறும் யோகம் உடையவர்களே. எழுத்தாற்றலால் பல நூல்கள் வெளிவரும். மக்களின் ஆதரவும். புகழும் பெறுவீர்கள். வாழ்க் கையில் உயர்வடைவீர்கள்.

நல்ல உடல்வாகுடையவர்களே. மத்திம வயதின்மேல் குண்டாகாமல்பார்த்துக் கொள்ளுதல்அவசியம். நரம்புத்தளர்ச்சியால்பிற்காலத்தில் சிலகோளா றுகள் ஏற்படும். அதிக உழைப்பு, மூழைக்குஅதிக வேலைகளைப் பையும் தரும்.அதனால் அவ்வப்போது ஓய்வு அவசியம் தேவை. தூங்கி எழுந்தால் சுறுசுறுப்புபெறலாம். வயிற்றுக்கோளாறு, அஜீரணக் கோளாறு, அல்சர் மத்திமவயதில் ஏற்படலாம். அது நேரம் தவறி உணவு உண்பதால் ஏற்பட்ட வியாதியாகும். மிதமான உணவு, நேரத்துக்கு உணவு உண்ணும் பழக்கம், தண்ணீர் அதிகம் அருந்துதல்இவைகளால் வியாதியைக் குறைக்கலாம். தியானம், யோகப்பியாசம் மன ஆறுதலையும், சந்தோஷத் தையும், சுகத்தையும் தரும்.

1-4-5-10-13-14-19-22-23-28-31ம் தேதிகள் எந்த ஆண்டு எந்த மாதமானாலும்நன்மை தரும்நாட்களாகும். வாழ்க்கையில் 1-4-5-10-13-14-19-22-23-28-31-32-37-40-41-46-50-55-58-59-64-68-ம் வயதுகளில் மிக முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெறும். 1-4-5-10-13-14-19-22-23-28-31ம் தேதிகளில் பிறந்தவர்களின் நட்பு என்றும் நிலையானதாகவும் கணவன் மனைவியும் இவ்வெண் அமைந்தால்குடும்ப வாழ்க்கையில் பிரச்சினைஏற்படாது. அமைதியானதாக இருக்கும்

வர்ணம்:- மஞ்சள் வர்ணம் மிக்க அதிர்ஷடம் தருவதாகும். பொன்நிற ஆடைகள் அணியும் போது பொலிவுடன் விளங்குவர் இந் நிறம் இவர்கட்கு வெற்றி தரும்.

தங்கம் இவர்களது சரீரத்துக்கு நன்மை தரும் உலோகம்.

இரத்தினம்:- புஷ்பராகம் அலுமினியம், ஹைட்ராக்ஸேடு, பிலோரின ரசாயனச் சேர்கை, கடினத் தன்மை 8; ஒப்படர்த்தி 3:4க்கு மேல் ஒளி தரும் தன்மை உடையது.

இக்கல்லை அணிவ தால் சிறுநீர்க்கோளாறுகள், சர்க்கரை வியாதி,புற்றுநோய், உடல உறவுச்சோர்வு, தோல்வி யாதி, முடக்குவாதம், சுவாசக்கோளாறுகள், சிறுநீர்எரிச்சலையும் குணப்படுத்துவதோடு; மனமகிழ்ச்சியையும் அதிர்ஷட்ட த்தையும் தரும்.

**வே. தவராசா**

# கொழும்பில் குண்டுவெடிப்பு ஒருவர் பலி இரு பொலிஸ் அதிகாரிகள் உட்பட 23 பேர் காயம்

**கொழும்பு நகரசபை மண்டபத்திற்கு அருகாமையில் நேற்றுக்காலை தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குண்டினை வெடிக்கவைத்ததில் இருபொலிஸ் அதிகாரி உட்பட 23 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் மூவர் வெளிநாட்டவர்கள்.**

**காயமடைந்தவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் இவர்களில் ஒருவர் பின்னர் மரணமடைந்ததாகவும் கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**



(கொழும்பு)

இச்சம்பவத்தைத் தொடர்ந்து படையினர் நடத்திய தேடுதலில் ஐவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது :

மேற்படி தற்கொலை குண்டுதாரி மீது சந்தேகம் கொண்ட அமைச்சரவை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவரை சோதனையிட முயன்ற போது சோதனையிடச் சென்றவர்களை கத்தியைக்காட்டி மிரட்டிவிட்டு தப்பியோட முயற்சி செய்தாராம்.

இதேவேளை தற்கொலை குண்டுதாரியின் உடலில் குண்டுக்கவசம் பொருத்தப்பட்டிருந்ததை கண்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குண்டுதாரியை பின்தொடர்ந்துள்ளனர்.

குண்டுதாரி நகர மண்டபப்பக்கமாக ஓடியுள்ளார். அச்சமயம் எதிரே நின்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சந்தேகம் கொண்டு குண்டுதாரியை சுட எத்தனித்த சமயம் குண்டுதாரி குண்டினை வெடிக்கவைத்துள்ளார்.

சம்பவத்தைத் தொடர்ந்து பூர்வாங்க விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இரசாயணப் பகுப்பாய்வாளர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து பரிசோதனைக்குத் தேவையான மாதிரிகளை பெற்றுள்ளதாகவும் தெரியருகின்றது.

இதேவேளை நேற்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் பலியான குண்டுதாரியின் இடது காலில் ஆறுவிரல்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை தற்கொலைக் காரியின் தலை சிதைவடையாத காரணத்தினால் புகைப்படத்தை பிரசுரிக்கமுடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

## வவுனியாவில் பாக்கு மூட்டைக்குள் இருந்து வெடிபொருட்கள் மீட்பு கடை உரிமையாளர் உட்பட அறுவர் கைது !

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் புலனாய்வுப் பிரிவினரால் வாகனம் ஒன்று சோதனையிடப்பட்ட போது பாக்கு மூடைஒன்றிற்குள் இருந்து வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக கடை உரிமையாளர் ஒருவரும் கடை வேலையாட்கள் ஐந்து பேரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சபம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது வவுனியாவில் புலனாய்வுப்பிரிவினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட சமயம் பாக்கு மூட்டை ஒன்றிற்குள் இருந்து வெடி பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

மேற்படி வாகனத்தை வாடகைக்கு அமர்த்தியவர் மெல்ல நழுவிவிட்டார். அதனைத் தொடர்ந்து வாகனச் சாரதி பாதுகாப்புத் தரப்பினரிடம் கொடுத்த தகவலையடுத்து மேற்படி பாக்குமூட்டை ஏற்றப்பட்ட கடையான சிவசக்தி வியாபார நிலைய உரிமையாளர் சி. சண்முகராசா, மற்றும் கடையில் வேலை செய்யும் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யபட்ட ஐவரில் நான்கு பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் கடை சீல்வைக்கப்பட்டுள்ளது.

## ஜே. வி. பி எம்பிக்கள் மூவர் ராஜினாமா

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த மூவர் ராஜினமா செய்யவுள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான அத்துல இந்திக்கவீரக்கோன், நிமல்கேரத், நிமல் உபதிஸ்ஸ ஆகிய மூவருமே ராஜினாமா செய்யவுள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணி ஜே.வி.பி சார்பில் போட்டியிட்ட சந்திரசேன விஜயசிங்க விமல்ரெத்தினாயகா . சுனில் அந்துநற்றி ஆகிய மூவருக்கும் சந்தர்ப்பம் வழங்குமுகமாகவே மேற்படி மூவரும் பதவி விலகுவதாக மேற்படி கட்சியின் பிரதி செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

## தவறிய குழந்தைகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ் நிருபர்)

தென்மராட்சிப் பகுதியில் யுத்த அனர்த்தங்களின் போது மக்கள் இடம் பெயர்ந்த சமயம் தவறவிடப்பட்ட மூன்று குழந்தைகள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வன்னியில் உள்ள பெற்றோர்கள் தங்களது மூன்று பிள்ளைகளையும் தேடி ஒப்படைக்குமாறு மல்லாவியில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் விண்ணப்பித்திருக்கின்றார்கள் இந்தக் குழந்தைகள் துன்னாலை ஞானாஸ்சாரியார் பாடசாலை நலன் ஓங்கு நிலையத்தில் இருந்து பொறுப்பேற்று நோய்யாளிகளின் கப்பலில் கொண்டு சென்று எதிர்வரும் சனிக்கிழமை பெற்றோரிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## எமது நிலைப்பாட்டில்....

அஞ்சப்போவதில்லை. அதற்காக நாம் தளரவும் மாட்டோம் என செல்வம் தெரிவித்தார்.

அரசாங்கம் எம்மீது மேற்கொண்டிருக்கும் கெடுபிடி தொடர்பாக எமது அரசியல் உயர்பீடக்குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகாவுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருப்பதாகவும் செல்வம் கூறினார்.

எமது பாதுகாப்பிற்கு இருந்த ஆயுதங்கள் அனைத்தும் களையப்பட்டபின் எமது உறுப்பினர்களுக்கு ஏற்படும் விபரீதங்கள் அனைத்திற்கும் ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாக செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மேலும் தெரிவித்தார். யுத்தம் நிறுத்தப்பட்டு விடுதலைப் புலிகளுடன் பேசி தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையில் இனப்பிரச்சிகைக்கு தீர்வு காணப்பட வேண்டும், என்ற நிலைப்பாட்டில் இருந்து நாம் விலகப்போவதில்லை. தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், உட்பட சகல அடக்குமுறைகளையும் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நாம் எதிர்ப்போம். இவ்வித கொள்கைகளுக்காகவே எமக்கு மக்கள் ஆணை தந்திருக்கிறார்கள். அதிலிருந்து எள்ளளவும் விலகமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

ரெலோவின் கொழும்பு அலுவலகத்தில் நள்ளிரவு வரை அக்கட்சியின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

## அரசும் ........

படைத்திட்டங்களை முன் வைத்துள்ளது.

1. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருதல்
2. அரசியல் தீர்வை வலியுறுத்தல
3. மக்கள் எதிர் நோக்கும் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்

போன்ற மூன்று விடயங்களை அணுகிக் கொண்டிருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

மேலும் வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்த வடக்கு கிழக்கு தற்காலிகமாக இணைக்கப் பட்டுள்ளது. இவற்றை நிரந்தரமாக இணைப்பதற்கு' உரிய சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருவோம் எனத் தெரிவித்தார்


**உங்கள் மனமகிழ்ந்த வியாபாரத்திற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே பத்திரிகை**

**தினக்கதிர்**


## துணிச்சல் .......

அம்பலப்படுத்துவதிலும். நிமலராஜன் தனிமனிதனாக நின்று ஆற்றிய பணி மறக்கமுடியாது. அநீதிகள், மோசடிகளை செய்தியாளனுக்கே உரிய மூர்க்கத்தனத்துடன் எதிர்த்து நின்று நிமலராஜனின் எழுத்துக்களை கருத்துக்களை நேர்மையுடன் நேரில் சந்திக்க வக்கற்றவர்கள்.

கோளைத்தனமாக துப்பாக்கி கொண்டு படுகொலை செய்திருக்கின்றனர். இந்த கொடூர செயலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். நிமலராஜனின் இழப்பு ஈடுசெய்ய முடியாது. அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தாருடனும் யாழ்ப்பாண செய்தியாளருடனும் எமது பெருந்துயரை பகிர்ந்து கொள்கின்றோம். என கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ் பத்திரிகை....

கீதவாணி, எனும் வெளிநாட்டு செய்தி ஊடகங்களின் செய்தியாளராகவும் சூரியன் எவ்.எம். உட்பட பல உள்நூர் தமிழ் ஊடகங்களின் ஊடகவியலாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தென்மராட்சிப் பகுதியில் இடம்பெறும் யுத்தகளச் செய்திகளை சம்பவம் நடைபெறும் இடங்களுக்குச் சென்று சேகரிக்கும் துணிவும் சுறுசுறுப்பும் கொண்டவர் வடக்கில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், தேர்தல் மோசடிகள் போன்றவற்றை வெளியுலகிற்கு கொண்டு வருவதில் மிகவும் அக்கறை காட்டியவர்.

இவ்வாறான மனித உரிமை மீறல் சம்பவங்களினால் அதிருப்தியுற்ற சில அதிருப்தியாளர்களின் செயலாக இது இருக்கலாம் எனவும் யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தீபாவளியை முன்னிட்டு யாழ் கடைகள் திறக்க நடவடிக்கை

(யாழ் நிருபர்)

வடபகுதியில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் உள்ள சகல வர்த்தக நிலையங்களும் பூரணமாக திறந்து வைக்கப்படவுள்ளன.

இதேவேளை இந்தக்கோரிக்கையை ஏற்று கடைகளைத் திறந்து வியாபாரம் செய்யலாம் என்று யாழ் வணிகக்கழகம் கூறுகின்றன.

யாழ் குடாநாட்டில் தீபாவளிக்கு இன்னும் எட்டு நாட்கள் இருக்கும் போது வர்த்தகம் தடைப்பட்டு இருக்கின்றது. தினசரி மக்கள் கூட்டம் யாழ் நகரில் அதிகரித்து வருவதாகவும் தெரியுவருகின்றது.

நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.